# தன்னாட்சி

*(உள்ளாட்சி உங்களாட்சி)*

**பதிவு எண்: 272/2018**

69, அங்கப்ப நாயக்கன் தெரு, சென்னை-600001.

மின்னஞ்சல் : thannatchi@gmail.com

**க.சரவணன்**
தலைவர்
97512 37734

**எஸ்.நந்தகுமார்**
பொதுச் செயலாளர்
90032 32058


---

**05.04.2019**

## <u>பத்திரிக்கைச் செய்தி</u>

### கிராம சபைக் கூட்டங்களை முறையாக நடத்துக!

"எங்கள் ஊராட்சியில் ஏன் கிராமசபைக் கூட்டத்தை நடத்தவில்லை?" என அரசிடம் கேட்டிருக்கிறார்கள் நாகப்பட்டினம் மாவட்டம், மயிலாடுதுறை ஒன்றியத்தில் உள்ள மாப்படுகை ஊராட்சி மக்கள். இன்றைக்குத் தமிழகத்தில் உள்ள பல கிராமங்களில் மக்கள் அரசிடம் எழுப்ப விரும்பும் கேள்வி இது. மாப்படுகை மக்களின் கேள்விக்கு மயிலாடுதுறை வட்டார வளர்ச்சி அலுவலர் தெரிவித்திருக்கும் பதில்தான் இந்த பத்திரிக்கைச் செய்திக்கானத் தேவையை ஏற்படுத்தியிருக்கிறது. "26.01.2019 அன்று மாநில அளவில் அரசுத் துறை ஊழியர்கள் வேலை நிறுத்தம் செய்ததால் கிராம சபா கூட்டம் நடைபெறவில்லை" என சமூக ஆர்வலர் ஒருவருக்கு எழுதியக் கடிதத்தில் (ந.க.எண்: 742/2016/அ4, நாள் 25.03.2019) பதிலாகத் தெரிவித்திருக்கிறார் மயிலாடுதுறை வட்டார வளர்ச்சி அலுவலர்.

தமிழ்நாடு அரசு, ஊரக வளர்ச்சித் துறையின் அரசாணை 245ன் படி, ஜனவரி-26, மே-1, ஆகஸ்ட்-15, அக்டோபர்-2 ஆகிய தேதிகளில் கட்டாயமாகக் கிராமசபைக் கூட்டம் நடத்தப்பட வேண்டும் [அரசு ஆணை (நிலை) எண்.245 ஊரக வளர்ச்சித் துறை, நாள் 19.11.1998]. மேற்குறிப்பிட்ட நாட்களில் கிராமசபைக் கூட்டங்கள் நடத்தாமல் இருப்பது சட்டத்தை மீறும் நடவடிக்கையாகும்.

மேலும், 21.01.2019 அன்று மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு எழுதிய கடிதத்தில் [ந.க.எண்.365/2019/ஊராட்சி 2.2], ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர், 26.01.2019 குடியரசு தின கிராமசபைக் கூட்டத்தில் விவாதிக்க வேண்டிய பொருள்கள் குறித்து விரிவாக எழுதியிருந்தார். அன்று நடைபெறும் கிராம சபை சம்பந்தமான அறிக்கையை தனக்கு 05.02.2019க்குள் அனுப்பி வைக்குமாறும் அவர் அந்தக் கடிதத்தில் தெரிவித்திருந்தார். இந்தக் கடிதத்தின்படி, அக்டோபர் 2018 முதல் டிசம்பர் 2018 வரையிலான ஊராட்சியின் நிதி செலவின அறிக்கையை மக்கள் பார்வையிட்டு ஒப்புதல் அளித்தல்; 14வது மத்திய நிதி மான்யக் குழுவின் படி தயாரிக்க வேண்டிய 'கிராம ஊராட்சி வளர்ச்சித் திட்டம் (VPDP); அதற்கான மக்கள் திட்டமிடல் இயக்கம் (People's Plan Campaign) போன்ற முக்கியப் பொருள்களைப் பற்றி ஜனவரி 26 கிராம சபைக் கூட்டம் விவாதித்திருக்க வேண்டும். ஆனால் இவ்வளவு முக்கியமான கிராம சபைக் கூட்டத்தை அரசு ஊழியர்கள் வரவில்லை என்கிற காரணத்தினால் நடத்தாமல் விட்டுவிட்டோம் எனச் சொல்வது அரசு நிர்வாகம்

ஊராட்சிகள் விஷயத்தில் எவ்வளவு அக்கறையின்றி இருக்கிறது என்பதையே காட்டுகிறது. இந்தப் பின்னணியில் பின் வரும் கேள்விகள் நம் முன் எழுகிறது.

- மாநில அளவில் அரசு ஊழியர்கள் போராட்டம் நடைபெற்றதால், ஜனவரி 26 கிராம சபை மாப்படுகையில் மட்டும்தான் கூட்டப்படவில்லையா அல்லது பல்வேறு மாவட்டங்களிலும் இதுதான் சூழலா?

- ஜனவரி 26 கிராம சபை நடக்காத ஊராட்சிகளில் மறுதேதி நிர்ணயித்து கிராமசபைக் கூட்டங்களை அரசு நடத்தியிருக்க வேண்டாமா? [ மாப்படுகை ஊராட்சியில் இரண்டு மாதங்களுக்கு மேலாகியும் இன்னும் ஜனவரி 26 நடந்திருக்க வேண்டிய கிராமசபை கூட்டப்படவில்லை என்பதை இங்கு கவனத்தில் கொள்ள வேண்டும்.]

- ஜனவரி 26 கிராமசபைக் கூட்டத்தில் விவாதித்திருக்க வேண்டிய மக்களின் ஒப்புதலை பெறவேண்டிய திட்டங்களின், அறிக்கைகளின் நிலை என்ன?

கிராம சபைகளை வலுப்படுத்துவதற்கான முயற்சிகளை ஆங்காங்கே பல சமூக ஆர்வலர்களும், கிராம இளைஞர்களும் தொடர்ந்து மேற்கொண்டு வருகிறார்கள். அதனாலேயே தற்போது தமிழகத்தில் பரவலாகக் கிராமசபையில் நாம் பங்கேற்க வேண்டும், நமது பஞ்சாயத்தை அதன் நிர்வாகத்தைச் சரியான வழியில் இயக்க வேண்டும் என்கிற விழிப்புணர்வு ஏற்பட்டு இருக்கிறது. ஆனால் அரசு, கிராமசபைக் கூட்டங்களை முறையாக நடத்துவதில் மிகவும் கவனக்குறைவாக இருந்து வருகிறது.

கடந்த இரண்டரை வருடங்களாக உள்ளாட்சித் தேர்தல் நடைபெறாத சூழலில், தனி அலுவலர்களாக நியமிக்கப்பட்டுள்ள வட்டார வளர்ச்சி அலுவலர்கள் (கி.ஊ), மக்களுக்குக் கிராமசபைக் கூட்டம் பற்றிய முறையான அறிவிப்பு கொடுப்பது, கூட்டத்தில் விவாதிக்கப்படவேண்டிய பொருள் சம்பந்தமான ஆவணங்கள் அனைத்தையும் வைத்திருப்பது மற்றும் மக்களின் ஆய்விற்கு அவற்றை வழங்குவது, இயற்றப்படும் தீர்மானங்களை நடைமுறைப்படுத்துவது ஆகிய பணிகளை முறையாகச் செய்கிறார்களா என்பது குறித்து அரசு உரியக் கவனம் செலுத்துவதில்லை. இனிவரும் காலங்களில் கிராமசபைக் கூட்டங்களை முறையாகவும், மிகக் கவனத்தோடும், மக்கள் பங்கேற்பை உறுதி செய்யும் வகையிலும் அரசு நடத்த வேண்டும் என்பதே நம் அனைவரின் கோரிக்கை!

**<u>இணைப்பு</u>:** மாப்படுகை ஊராட்சியைச் சேர்ந்த திரு.ஆர்.ராமலிங்கம் அவர்களுக்கு மயிலாடுதுறை ஒன்றிய வட்டார வளர்ச்சி அலுவலர் அனுப்பிய கடிதம், நாள்: 25.03.2019






(க.சரவணன்)
தலைவர்

(எஸ்.நந்தகுமார்)
பொதுச் செயலாளர்

பிளாஸ்டிக் பொருட்களை
தவிர்ப்போம்

**அனுப்புநர் :**

திருமதி.ப.வாணி,
வட்டார வளர்ச்சி அலுவலர்(வ.ஊ),
மயிலாடுதுறை.

**பெறுநர் :**

திரு.ஆர்.ராமலிங்கம்,
த/பெ.இரெ.அம்பலவாணன்,
104,மெயின் ரோடு,
மாப்படுகை,
மயிலாடுதுறை.

ந.க.எண்: 742/2016/அ4 நாள்: 25.03.2019

அய்யா,

பொருள்: விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் மனு - நாகப்பட்டினம் மாவட்டம் - மயிலாடுதுறை வட்டாரம் - மாப்படுகை ஊராட்சி 26.01.2019 கிராமசபா கூட்டம் மறு தேதியில் - நடத்த கோரியது - தொடர்பாக.

பார்வை: 1.மாவட்ட ஆட்சியர், வேளாண்மை பிரிவு, நாகப்பட்டினம் அவர்களின் கடித எண் : வே.7/2019 நாள் : 03.2019.
மனு எண் : 52 நாள் : 28.02.2019

----------

பார்வையில் காணும் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் பெறப்பட்ட மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு மயிலாடுதுறை வட்டாரத்திற்கு உட்பட்ட மாப்படுகை ஊராட்சியில் 26.01.2019 அன்று கிராமசபா கூட்டம் நடைபெறவில்லை எனவும், மறு தேதியில் கிராமசபா கூட்டம் நடத்த கோரியும் மனு வரப்பெற்றது.

எனவே, தொடர்புடைய மனு குறித்து ஆய்வு செய்யப்பட்டதில், 26.01.2019 அன்று மாநில அளவில் அரசு துறை ஊழியர்கள் வேலை நிறுத்தம் செய்ததால் கிராமசபா கூட்டம் நடத்தப்பெறவில்லை எனவும், கிராமசபா கூட்டம் நடத்துவதற்கு அரசால் நிர்ணயிக்கும் தேதியில் மட்டுமே நடத்த இயலும் என்ற விபரமும் மனுதாரருக்கு தெரிவிக்கப்படுகிறது.

வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ),
மயிலாடுதுறை.

25.3.19

**நகல்:**

மாவட்ட ஆட்சியர், வேளாண்மை பிரிவு,
மாவட்ட ஆட்சியரகம், நாகப்பட்டினம்.